# மியாட்டில் மாணவர்களுக்கு இலவச தடுப்பூசி

■ சென்னை

மியாட் மருத்துவமனையில் சுமார் 1,000 மாணவ, மாணவிகளுக்கு முதல் தவணை ஹெபடைடிஸ் பி தடுப்பூசி இலவசமாக போடப் பட்டது.

ஹெபடைடிஸ் பி (கல்லீரல் நோய்கள்) தினத்தை முன்னிட்டு, சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் ஹெபடைடிஸ் பி இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் தடுப்பூசி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமை மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குநர் பிரித்வி மோகன்தாஸ் தொடங்கி வைத்தார்.

இதில் சென்னையில் உள்ள 5 தனியார் பள்ளிகளில் படிக்கும் சுமார் 1,000 மாணவ, மாணவிகளுக்கு நோய் கண்டறிதல் பரிசோதனை செய்து முதல் தவணை ஹெபடைடிஸ் பி தடுப்பூசி போடப்பட்டது. முன்னதாக மாணவ மாணவிகளிடம் ஹெபடைடிஸ் பி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டது. இரண்டாம் தவணை தடுப்பூசி ஒரு மாதத்திலும், மூன்றாம் தவணை தடுப்பூசி 6 மாதம் கழித் தும் மாணவ, மாணவிகளுக்கு போடப்படும் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் இரைப்பை, குடல், கல்லீரல் சிகிச்சை துறை இயக்குநர் டாக்டர் ஜார்ஜ் எம். சாண்டி, டாக்டர்கள் அருள் பிரகாஷ், அருண், மிடியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.